| | |
|---|---|
| உறுப்பினர் எண் | 136 |
| பெயர் | நா. வெங்கட்ராமன் |
| Name in English | N. Venkataraman |
| முகநூல் பெயர் | na venkataraman |
| குறிப்பு | ரசாயன பொறியியலில் முதுநிலை\பட்டம் பெற்று, சுமார் 35 வருடங்களாக எரிசக்தி, பாதுகாப்பு, சுற்றுப்புறம் மற்றும் சுகாதார துறையில் வல்லமை பெற்று, இந்தியா, சீனா, சிங்கப்பூர் நாடுகளில் பணிபுரிந்து, தமிழைக் காதலித்து, தமிழோடு வாழ்ந்து தமிழை சுவாசித்து வருகிறார்.<br>தமிழில் எழுதுவது இவரது பொழுதுபோக்கு. அழகிய தமிழுக்குக்கு தான் என்றும் அடிமை என்கிறார்.<br>பாரதியின் சிந்தனை வரிகளும் திண்ணப்பன் போன்ற சான்றோர்களும் தனது தமிழ் வாழ்வுக்கு உயிர் மூச்சு எனும் இவர் " குறளின் எளிய குரல்" என்ற தலைப்பில் குறளுக்கு புதியதொரு முறையில், எளிய சொற்களால் குறளின் அதே வடிவத்தில் எல்லோருக்கும் புரியும் வண்ணம் உலகத்துக்கு முதல் படைப்பாகப் படைத்திருக்கிறார்.<br>மக்களின் பேராதரவுடன் மேலும் இரண்டு புத்தகங்களைப் படைத்துப் பேனா முனையில் பணி செய்ய, பாலைவனத்தில் மழைத்துளிக்குக் காத்திருப்பதைப்போல், கற்பனை வெள்ளத்தில் நீந்துவதைப்போல், பரிட்சை முடிவுகளுக்கு மாணவன் காத்திருப்பதைப்போல், நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறார். |

